2) நுண்குழாய்கள் கலத்தின் அகத்தே ஏற்படும் அசைவுகளுக்கு உதவுகின்றன.

3) முதலுரு மென்சவ்வு கலத்துக்கு உள்ளே பதார்த்தங்கள் செல்வதையும் கலத்தில் இருந்து பதார்த்தங்கள் வெளியேறுவதையும் ஒழுங்கு படுத்துகின்றது

4) கலத்தின் DNA முழுவதும் நிறமூர்த்தங்களில் அடங்கியிருக்கும்

5) புன்கருவில் இரைபோசோமின் அலகுப் பிரிவுகள் தொகுக்கப்படும்.

(Aug 1988)

130. சகல அங்கிகளும் ஒரு கலத்தால் அல்லது பல கலங்களால் உருவாக்கப்படுகின்றன என்ற கூற்று எந்த விஞ்ஞானியால் முதன் முத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக கூறப்பட்டது?

1) Robert Hooke 2) Van Leeuwanhoek
3) Robert Brown 4) Theodor Schwann 5) Danielli
(Aug 1988)

131 கட்டமைப்பிலும் தொழிற்பாட்டிலும் புரதங்களே சகல உயிர் சார்ந்த மூலக்கூறுகளிலும் பன்மை நிலையை உச்சமாக காண்பிக்கும் மூலக்கூறுகளாகும் ஆனால் அவற்றின் தொழில்களில் அடங்காத தொழில்

1) முதலான சக்திக் களஞ்சியமாக செயற்படல்
2) சமிபாடு 3) இரசாயன இயைபாக்கம்
4) பாதுகாப்பு 5) வல்கூட்டுத்தாங்கல். (Aug 1988)

132. 20ம் நூற்றாண்டில் ஏற்பட்ட முன்னேற்றங்களில் உயிரியலை அதிகம் ஊக்குவித்த முன்னேற்றமாவது

1) இலத்திரன் நுணுக்குக்காட்டியின் பாவனை
2) விகாரங்களை பிறப்பிக்கும் கருவிகளின் உபயோகம்
3) புரதத் தொகுப்பை பற்றிய விளக்கம்
4) DNAயின் கட்டமைப்பின் கண்டுபிடிப்பு
5) முதலுரு மென்சவ்வின் அமைப்பை வர்ணித்தமை
(Aug 1988)

133 உயிர்வாழ் அங்கிகளில் மிக ஏராளமாக காணப்படும் பதார்த்தமாவது

1) புரதம் 2) வெல்லம் 3) கொழுப்பு 4) நீர் 5) ATP

134) இழைமணிகளைப் பற்றிய கீழ்காணும் கூற்றுக்களுள் பிழையானது எது?

1) அவை தற்பகரிப்பு செய்யும் புன்னங்கங்களாகும்
2) தம்மகத்திலேயே அவை புரதத்தொகுப்பு செய்கின்றன.
3) தமக்குச் சொந்தமான பாரம்பரியபொருளை உள்ளடக்குகின்றன
4) கிரெப்பின் வட்டம் நடைபெறுவதற்கு வேண்டிய ஸ்தானங்களை அவை வழங்குகின்றன
5) பெற்றோரில் இருந்து எச்சங்களுக்கு அவை கடத்தப்படும்
(Aug 1987)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

135. DNAயின் ஒரு இழையின் காரங்களின் தொடர் AGCGCAT ஆக இருந்தால் குறைநிரப்பும் மற்ற இழையில் காணப்படும் காரத்தொடர் என்ன?

1) UCGCGUA 2) TCGCCGA 3) TCGCGTA
4) TCGCATT 5) TCGUATT

(Aug 1987)

136. கலத்தினுள் நொதியங்கள் தொகுக்கப்படும் பிரதான ஸ்தானங்களாவன

1) இலைசோசோம்கள் 2) றைபோசோம்கள்
3) சிறுமணியற்ற ER 4) நிறமூர்த்தங்கள்
5) இழைமணிகள்

(Aug 1986)

137. இலைசோசோம்கள் சம்பந்தப்படுவது, கலத்தகத்தே நடைபெறும்

1) சமிபாட்டுடன் 2) சுவாசித்தலுடன் 3) சுரத்தலுடன்
4) தொகுப்புடன் 5) கடத்தலுடன்

(Aug 1986)

138. ATP

1) பற்றீரியா தவிர்ந்த ஏனைய உயிர்த்தொகுதிகள் யாவற்றிலும் காணப்படும்
2) நியூக்கிளிக்கமிலத்தில் காணப்படாத ஒரு காரத்தை கொண்டதாகும்
3) றைபோசோம்களினுல் தயாரிக்கப்படுகின்றது
4) சக்தியை சேமித்து பின் விடுவிக்கின்றது
5) இரண்டு உயர்சக்தி இணைப்புக்களை அடக்கும்.

(Aug 1985)

139. ATP மூலக்கூறு பற்றிய சரியான கூற்று

1) 2 உயர்சக்தி பொஸ்பேற்று உடையது
2) 2 பொசுபேற்று கூட்டம் உடையது
3) இழைமணிகளில் மாத்திரம் உண்டாக்கப்படும்
4) தசைத்தொழிற்பாட்டில் மாத்திரம் பயன்படும்
5) விலங்குக் கலங்களுக்கு மட்டும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. ATP மூலக்கூறு ஒன்று ADP மூலக்கூறாக மாற்றமடையும்போது வெளிவிடப்படும் சக்தியின் அளவு

1) 8 k. cal 2) 10 k. cal 3) 16 k. cal

4) 18 k. cal 5) 34 k. cal

141. ATP (அடினைன் - றைபோஸ் O — P — O — P — O — P) இல் கூடியளவு சக்தி ஏற்கும் இணைப்பு

1) அடினைன் - றைபோஸ் 2) றைபோஸ் — O

3) — O — P 4) — P — O 5) அடினைன் . றைபோஸ் — O

142. கலங்களில் காணப்படும் சிறிய சேதன மூலக்கூறு

1) ATP 2) DNA 3) RNA 4) மியூசின் 5) Hb

143. ATP பற்றிய பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று எது?

1) Deoxyribose வெல்லம் உடையது

2) இதன் நீர்ப்பகுப்பை ஏற்படுத்தும் நொதி ATP ase ஆகும்

3) பெரும்பாலும் 3ம் பிணைப்பே உயர்ந்த சக்தியை கொண்டது

4) தொழிற்பாட்டிற்கு உடனடியாக சக்தியை வழங்கும்

5) பற்றீரியாக்களிலும் காணப்படும்

144. கலத்தின் கரு

1) ஒரு தனி மென்சவ்வினால் வரையறுக்கப்படும்

2) உயிர்வாழ் அங்கிகள் யாவற்றிலும் காணப்படும்

3) இலத்திரன் நுணுக்குக்காட்டியினூடு மட்டுமே கண்ணிற்குத் தென்படும்

4) கலத்தின் தகவல் மையமாகவும் கட்டுப்படுத்தும் மையமாகவும் இருக்கும்

5) DNA அடங்கும் கலத்தின் ஒரே ஒரு பகுதியாகும்.

(Aug 1985)

145. இறைபோசோம்கள்

1) மூன்று உப அலகுகள் உடையவை

2) SER இன் மேல் காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) புரதத் தொகுப்புடன் தொடர்புடையவை
4) தொகுக்கப்பட்ட புரதங்களை பொதியாக்க உதவுகின்றன
5) கருவினுள் தொழில் எதுவும் புரிவதில்லை. (Aug 1984)

146. இழைமணிகளைப்பற்றிய கீழ்க்காணும் கூற்றுக்களில் பிழையானது எது? அவை
1) ATP தொகுப்பு நடைபெறும் பிரதான இடங்களாகும்
2) சித்திரிக்கமில வட்டத்தின் நொதியங்களை உள்ளடக்கும்
3) ஒட்சியேற்ற பொஸ்போரிலேற்றத்தில் பங்குபற்றுகின்றன
4) உடற்றொழில் முயற்சிகளில் ஈடுபடும் கலங்களில் ஏராளமாக காணப்படும்
5) தனிமென்சவ்வுகளினால் ஆக்கப்படும். (Aug 1984)

147. இழையுருப்பிரிவின் அனு அவத்தையை சிறப்பிக்கும் சம்பவமாவது
1) புன்மையத்திகள் எதிர்முனைவுகளை நோக்கி இடம்பெயர்தல்
2) நிறமூர்த்தங்கள் குறுகித் தடித்தல்
3) நிறமூர்த்தங்கள் இரட்டித்தல்
4) மத்திய கோட்டுத் தட்டில் நிறமூர்த்தங்கள் அடுக்கப்படல்
5) புன்கரு மறைதல் (Aug 1983)

148. உச்சிமூர்த்தம் என்பது
1) சிறப்புற்ற இழைமணியாகும்
2) கருவினுள் அமைந்திருக்கும்
3) கலப்பிரிவில் பங்கேற்கும்
4) இரட்டை மென்சவ்வுடையது
5) வேறுபடுத்தப்பட்ட இலிசோசோமாகும் (Aug 1983)

148. குறித்த ஒரு கலத்தின் நிறமூர்த்தங்களின் இருமடி எண்ணிக்கை பத்தாகும். இக்கலம் இழையுருப்பிரிவுக்குள்ளாகும்போது, கருமென்சவ்வு மறையும் சமயம் காணப்படும் அரைநிறவுருக்களின் எண்ணிக்கை யாது?

1) 00 2) 05 3) 10 4) 20 5) 40

(Aug 1983)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. பிசிர்கள், சவுக்குமுளேகள், புன்மையந்திகள், விந்துக்களின்வால்கள் ஆகியவை யாவும்

1) இடப்பெயர்ச்சியுடன் தொடர்புடையவை
2) தனியே ஒரு சல விலங்கினங்களில் மட்டும் காணப்படும்
3) ஒன்றுடனென்று தொழில் ஒப்புடையவை
4) ஓரேவித நுண் அமைப்புகள் உடையவை
5] சகல விலங்கினங்களிலும் காணப்படும். [Aug 1982]

151. விலங்குகளில் நிறமூர்த்தங்கள் சோடியாக காணப்படாதது

1] முதிர்ந்த புணரிகளில் மட்டும்
2] துணேப்புணரிக்குழியங்களிலும், புணரிகளிலும்
3] மூலவுயிர்க்கலங்களில் மட்டும்
4] உடற்கலங்களில் மட்டும்
5] துணேப்புணரிக்குழியங்கள், புணரிகள் தவிர்ந்த ஏனேயகலங்களில்

152. கலமொன்றில் அழிக்கும் சக்தி கொண்டுள்ள நொதியங்கள் சேமிக்கப்பட்டிருப்பது

1) வெற்றிடங்களில் 2) கொல்கி உபகரணங்களில்
3) ரைபோசோம்களில் 4) இலசோசோம்களில்
5] இழைமணிகளில் [Aug 1981]

153. விகாரங்களிலே பெரும்பாலானவை உடனடியாக கண்களுக்கு புலனுவதில்லே, ஏனெனில் அவை

1] பின்னடைவானவை 2] கொல்பவை
3] அகவங்கங்களேயே பாதிக்கின்றன
4] உயிரிரசாயன இயல்புடையவை
15] அரிதானவை. [Aug1981]

53 கலப்பிரிவின்போது

1] DNA இன் இரட்டிப்பு முன்னவத்தையில் நடைபெறும்
2] ஒருசில கதிர்நார்கள் மையப்பாத்துக்களுடன் தொடுக்கப்படும்
3] பிரிவுத்தளம் கதிர்த்தளத்திற்குச் சமாந்தரமானதாகும்
4] புன்மையத்திகள் பிரியுமுன்னர் நிறமூர்த்தங்கள் தென்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5] கலத்திற்குரிய புன்னங்கங்கள் யாவும் இரட்டிக்கப்படுகின்றன
(Aug 1980]

155. கலப்புன்னங்கங்களில் இரட்டிக்கும் ஆற்றல் உடையவை
1) இழைமணிகள் 2) பச்சையவுருவம் 3) இலைசோசோம்கள்
4) (1)உம் (2)உம் 5) (1)உம் (2)உம் (3)உம்
(Aug 1980)

156. கலமொன்றில் கிளைக்கோப்பகுப்பு நொதியங்கள் காணப்படுவது
1) குழியமுதலுருவில் 2) கருவில் 3) இலைசோசோம்களில்
4) இழைமணி மென்சவ்வில் 5) இழைமணித் தாயத்தில்
(April 1981)

157. இருமடியமான, இருமடியக் கலமொன்றில் இருக்கக்கூடிய DNA இன் அளவு
1) இடையவத்தையின் ஆரம்பத்தில் மிகக்குறைவாக இருக்கும்
2) முன் அவத்தையின் ஆரம்பத்தில் மிகக் குறைவாக இருக்கும்
3) அனு அவத்தையின்போது மிகக் குறைவாக இருக்கும்
4) மேன்முக அவத்தையின் போது மிகக்குறைவாக இருக்கும்
5) கலவட்டத்தின் பொழுது தொடர்ந்தும் மாறாமல் ஒன்றாகவே இருக்கும். (April 1981)

158ம் 159ம் வினுக்கள் பின்வரும் கலப்புன்னங்கங்களில் தங்கியிருக்கின்றன.

A) புன்கரு B) இழைமணி C) இரைபோசோம்
D) கொல்கிச் சிக்கல் E) இலைசோசோம்

158. RNA பொதுவாகக் காணப்படுவது
1) A இல் மட்டும் 2) C இல் மட்டும் 3) A, C ஆகியவற்றில்
4) A, B, C ஆகியவற்றில் 5) A, B, C, D, E ஆகியவற்றில்
[April 980]

159. எல்லைப்படுத்தும் மென்சவ்வு காணப்படுவது
1) B, D ஆகியவற்றில் 2] B, E ஆகியவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3] B, D, E இல்  4] A, B, D, E இல்
5] A, B, C, D, E ஆகியவற்றில்  [April 1980)

159ம் 160ம், 161ம், வினாக்கள் பின்வரும் கல நொதியங்களில் தங்கியிருக்கின்றன.

A] Deoxyribo Nuclease  B] Phosphatase
C] DNA Polymerase  D] Amino acyl Transferase
E] RNA Polymerase

160. Lysosomeகளில் நீங்கள் காண எதிர்பார்ப்பது

1] B மட்டும்  2] A, B மட்டும்  3] A, B, C ஆகியன
4] A, B, D ஆகியவை  5] A, C, E ஆகியன

[April 1980]

161 பரதத்தொகுப்பில் நேரடியாக பங்குபெறும் நொதியம் / நொதியங்கள்

1] E மட்டும்  2] D மட்டும்  3] C, D, E ஆகியன
4] A, C, D, E ஆகியன  5) A, B, C, D, E ஆகியன

[Aprrl 1930]

162. அமினோ அமிலங்கள் காணப்படுவது

1) D யில் மட்டும்  2) B, D, ஆகியவற்றில்
3) C, D, E ஆகியவற்றில்  4) A, C, D, E ஆகியன
5) A, B, C, D, E ஆகியன

(April 1980)

163. இழையுருப்பிரிவின்போது பின்வரும் கலப்புன்னங்கங்களுள் எது மகட்கலங்களினுள்ளே **செல்வதில்லை**

1) புன்கருக்கள்  2) நிறமூர்த்தங்கள்  3) இழைமணிகள்
4) புன்மையத்திகள்  5) இறைபோசோம்கள்

(Aug 1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. 162ம் வினுவிலே குறிப்பிட்ட கலப்புன்னங்கங்களுள் எது நியூக்கிளிக்கமிலத்தைக் கொண்டு இருப்பதில்லை

1) 1 2) 2 3) 3 4) 4 5) 5 (Aug 1979)

165. இலிப்போ புரத மென்சவ்வு பின்வரும் எதில் காணப்படுவதில்லை

1) புன்கரு 2) ER 3) இழைமணிக்கவசம்

4) கரு 5) கொல்கிச் சிக்கல் (Aug 1979)

166. அவசியமான அமினே அமிலங்களாவன, ஒரு விலங்கு

1) அதன் முன்னேடிகளில் இருந்து தொகுக்க முடியாதவை
2) அதன் சாதாரண உணவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாதவை
3) அதன் இளம் பருவத்தில் மாத்திரம் வேண்டிநிற்பவை
4) அதன் வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கு வேண்டி நிற்பவை
5) அதன் இனப்பெருக்கத்தின்போது மாத்திரம் வேண்டிநிற்பவை (Aug 1979)

167. வெவ்வேறு வகை மூலக்கூறுகள் வெவ்வேறு வீதங்களில் முதலுரு மென்சவ்வினூடாகச் செல்கின்றன. பின்வருவனவற்றுள் எந்தவொன்று முதலுருமென்சவ்வின் குறுக்கே குழியமுதலுருவுக்கு மிக விரைவாக செல்லும் என எதிர்பார்ப்பீர்?

1) இலிப்பிட்டு கரைதகு பதார்த்தங்கள்
2) இலிப்பிட்டு கரையாப பதார்த்தங்கள்
3) புரதங்கள்
4) மாப்பொருள்
5) குளுக்கோஸ் (Aug 1979)

168. புரதங்கள் குழியமுதலுருவிலே இறைபோசோம்கள் மீது தொகுக்கப்படுகின்றன. இறைபோசோம்கள் எங்கு உண்டாகின்றன.

1) ERஇல் 2) புன்கருவில் 3) கருவில்

4) கருச்சூழியில் 5) குழியமுதலுருவில் April 1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

169 இலேசோசோம்கள் பின்வரும் எச்செயற்பாட்டில் முக்கியபங்கை ஆற்றும் எனக் **கருதமுடியாது?**

1) உபயவாழ்வு விலங்கின் உருமாற்றத்தில் வால் உள்ளொடுக்கப் படுதல்
2) முலையூட்டிகளின் சூலகத்திலே மஞ்சட்சடலம் சிதைவுறுதல்
3) அமீபாவிலே உணவுத் துணிக்கைகள் சமிபாடடைதல்
4) முள்ளந்தண்டு விலங்குகளிலே வெண்குருதிக் குழியங்களினால் பற்றீரியங்கள் அழிக்கப்படுதல்
5) தவளையின் புன்னுதரணுதல் (April 1979)

170. ஒடுக்கற் பிரிவின்போது முதன்முதலில் ஜோப்புகள் காணப்படுவது

1) மெல்லிழை நிலையில் 2) நுகவிழை நிலையில்
3) தடிப்பிழை நிலையில் 4) இருமடியிழை நிலையில்
5) ஊடியக்க நிலையில் (April 1978)

171. விலங்குக் கலமொன்றின் இழையுருப்பிரிவின் ஆரம்பத்தை பின்வருவனவற்றுள் எது காட்டுகிறது?

1] மையமூர்த்தப்பிரிவு 2] புன்கருவின் மறைவு
3] கதிர் உருவாக்கம் 4] கருமென்சவ்வின் பிரிந்தழிவு
5] நிறமூர்த்தங்களின் இழைத்தோற்றம் [April 1978]

171ம், 172ம் வினாக்கள் பாலூட்டிகளின் பின்வரும் கலவகைகளை அடிப்படையாகக் கொண்டவை.

A] நாரரும்பர்கலம் B] செங்குருதிக்குழியம்
C] நரம்புக்கலம் D] விந்துப்பிறப்புக்கலம் E] சூல்

172. ஒருமடி நிலையில் உள்ள கினோம் [genome] பின்வருவனவற்றுள் எதிலே காணப்படலாம் என நீர் எதிர்பார்ப்பீர்?

1] E இல் 2] D இலும் E இலும்
3] A இலும் C இலும் D இலும் E இலும்
4] A, B, C. D, E ஆகியவற்றில்
5] மேற்கூறிய கலவகைகள் எதிலும் இல்லை. [April 1978]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

173. இழைமணிகள் காணப்படுவது

1] A இல் மட்டும் 2] A இலும் C இலும்
3] A, C, E ஆகியவற்றில் 4] A, C, D, E ஆகியவற்றில்
5] A, B, C, D, E ஆகியவற்றில [April 1978]

173 175 வரையிலான வினுக்கள் பின்வரும் கலப்புன்னங்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

a] புன்கருக்கள் b] லைசோசோம்கள் c] இழைமணிகள்
d] ER e] கொல்கியின் உபகரணங்கள்.

174. ATP தொகுப்பைச் செய்வது

1] a 2] b 3] 4] d 5] e [April 1977]

175 கலச்சுரத்தலின் பொதியாக்கலில் நேரடியாக சம்பந்தப்படுவது

1) a 2] b 3] c 4) d 5) e [April 1977]

176, Ribosome உற்பத்தியில் சம்பந்தப்படுவது

1) a 2) b 3) c 4) d 5) e [April 1977

177. இறைபோசோம்களில் RNA, புரதம் ஆகியவை இரண்டும் உண்டு இவற்றுள் இறைபோசோமிற்குரிய RNA புன்கருவில் தொகுக்கப்படும். இறைபோசோமிற்குரிய புரதம் தொகுக்கப்படும் இடமானது

1] புன்கரு 2] கருமுதலுரு 3] குழியமுதலுரு
4] புன்கருவும் கருமுதலுருவும்
5] புன்கருவும் கருமுதலுருவும், குழியமுதலுருவும் [April 1976]

178 இலிப்போ புரதமென்சவ்வை **கொண்டிராத** அங்கமாவது

1] கரு 2] இலைசோசோம் 3] இழைமணி
4] சொல்கி உபகரணம் 5] புன்கரு [April 1976]

வினுக்கள் 179ம் 178ம் பின்வரும் நொதியங்களைப் பற்றியவை

A] DNA பொலிமரேசு B] DNA ஏசு
C] அமிலப்பொசுபற்றேசு D] ATP ஏசு
E] அசற்றைல்கோலின் எசுத்தரேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179. இழைமணியில் காணப்படுபவை

1] A, D  2] A, B, D  3] B, C, E  4] D மட்டும்
5] மேற்கூறிய நொதிகள் எவையும் இல்லை.

180. இலைசோசோம்களில் காணப்படுபவை

1) B, C  2) B, C, E  3. C, D, E
4 A, B, C, D  5. A, B, C, D, E  (April 1976)

181. கீழ்க்காணும் கட்டமைப்புக்களில் இழைமணிகளை கொண்டிராதது.

1. தோலின் மல்பீசியன் படை  2. கசியிழைய கலங்கள்
3. பாலூட்டிகளின் கண்ணின் விழிவெண்படலம்
4. தேரையின் விந்து  4. தோல், கூம்புக்கலங்கள்

182. சில தொடுப்பிழைய கலங்களை பொருத்தமான முறையில் நசுக்கி அவற்றின் கல உள்ளடக்கம் பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட தொங்கல் உயர்ந்து வேகத்தில் பல மணிநேரம் மைய நீக்கிடுல் சுழற்றப்பட்டது. மையநீக்கிக் குழாயின் அடியில் நீர் காணமுடியும் என எதிர்பார்க்கும் பொருள்

1. கல ஒடிவுகள்  2. இழைமணிகள்  3. இலைசோசோம்க
4. கருக்கள்  5. றைபோசோம்கள்

183. Janus Green B தாழ்த்தப்படும்போது சிவப்பு நிறமாக மாறும் உயிர்ச்சாயமாகும். இச்சாயம் சேர்க்கப்பட்டபோது கடல் முள்ளி முட்டையின் சிலபகுதிகள் சிவப்பு நிறமாகின. இப்பகுதியில் உயர் செறிவில் காணப்படும் பொருள்.

1. கருவூண் சிறுதட்டுக்கள்  2. இழைமணிகள்
3. இலைசோசோம்கள்  4. கொல்கி உபகரணம்
5. றைபோசோம்கள்

[April 1975]

184. பின்வரும் கூற்றுக்களுள் எது முதலுருவைப் பற்றி சிறப்பாக கூறுவது.

1. நாரானது.  2. நீரானது  3. சிறுமணியுருவானது
4. கூழ்நிலையானது  5. மென்சவ்வானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

185. ஓரிக்கற்பிரிவின் பின்வரும் எந்நிலையில் குறுக்குப் பரிமாற்றம் நிகழும்
1. மெல்லிழை நிலை 2. நுகவிழை நிலை 3. தடிப்பிழை நிலை
4. இருமடியிழை நிலை 5. ஊடியக்க நிலை

# குழியவியல்
# (CYTOLOGY)

186. புரதத் தொகுப்பின்போது நிகழாதது எது?
1. DNA யினது இரு இழைகளும் தற்காலிகமாக, பிரிந்து T—RNA ஆக்கப்படல்
2. M — RNA கருமென்சவ்வின் துவாரங்கள் வழியாக குழிய வுருவையடைதல்
3. T — RNA அமினோ அமிலத்தை இரைபோசோமின் மே பரப்பில் நிறுத்துதல்
4. இரைபோசோம் M — RNA இழையின்மேல் அசைதல்
5. M RNA யும் R — RNA யும் அமினோ அமிலமும் சேர்ந்து இரைபோசோம் சிக்கலை ஆக்குதல்

187. இலைசோசோம்
1. நீர்ப்பகுப்பு நொதிகளையுடையது
2. இரட்டை மென்சவ்வினால் சூழப்பட்டுள்ளது
3. செங்குழியங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளது
4. இரட்டிக்கும் தன்மையுடையது
5. வித்தின் நகத்துண்டிலுள்ளது.

188. இழையுருப் பிரிவு ஒடுங்கற் பிரிவை ஒத்திருப்பது
1. நிறமூர்த்தங்கள் உருவாகையில் மணிக்கோவை உருவமுடையதில்
2. ஒத்த நிறமூர்த்தங்களுக்கிடையில் இணைப்புகள் ஏற்படுவதில்
3. நிறமூர்த்தங்கள் நீரை இழந்து குறுகித்தடிப்படைதலில்
4. நிறமூர்த்தங்கள் கலத்தின் முனையை நோக்கி கடத்தப்படுவதில்
5. ஒத்த அமைப்புடைய நிறமூர்த்தங்கள் சோடி சேருதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

189 புரதத் தொகுப்பின்போது கலமொன்றில் M R N A உண்டாக்கப் படுவதும் மொழி பெயர்க்கப்படுவதும்
1. குழியவுருவில் 2 கருவில் 3. புன்கருவில்
4. முறையே குழியவுருவிலும், கருவிலும்
5. முறையே கருவிலும் குழியவுருவிலும்

190. பின்வரும் தகவல்களுள் **பிழையானது**.
1. DNA கலத்தின் தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்தும்
2. இலைசோசோம் நீர்ப்பகுப்பு நொதியங்களைக் கொண்டிருக்கும்
3. கொல்கியுடல் வித்துகளின் உச்சி மூர்த்தத்தை உண்டாக்கும்
4 NA மூலக்கூறு கலத்தின் பிறப்புரிமையியல் தகவல்களைக் கொண்டிருக்கும்
5. கதிருரு நார்கள் புன்குழாய்களால் ஆனவை

191 கலவட்டம் ஒன்றின்போது தொகுப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவது
1. முன்னவத்தையின்போது 2. இடையவத்தையின் போது
3. அனுவவத்தையின் போது 4 அனு அவத்தையின் போது
5. ஈற்றவத்தையின் போது

192. புன்மையத்தி,
1. 9+2 என்ற அமைப்பையுடையது 2. மென் சவ்வையுடையது
3. எல்லாக் கலங்களிலும் காணப்படும்
4. இடை அவத்தையின் போது இரட்டிப்படையும்
5. கலப்பிரிவின் ஆரம்பத்தில் சோடி உடல்களாக உள்ளது

93. புன்கரு,
1. தனிமென் சவ்விஞற் சூழப்பட்டது
2. R—RNA ஐச் செறிவாகவும், DNA ஐச் சிறிதளவிலும் கொண்டது
3. கலப்பிரிவின் போது தாய்க் கலத்திலிருந்து மகட்கலத்தினுட் செல்லும் 4. இலிப்பிட்டை தொகுக்கும்
5. M—RNA ஐ ஆக்கும்

194. இடையவத்தையின் போது **நிகழாதது** எது?
1. DNA பகர்ப்பு
2. கதிர் நார்களை ஆக்கும் புரதங்கள் தொகுக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மையமூர்த்தம் தோன்றல்
4. கலப்பிரிவுக்குரிய சக்தி சேமிக்கப்படல்
5. கலப்புன்னங்கங்கள் உருவாக்கப்படல்

195 நிறமூர்த்தத்தில் உள்ள மையப்பாத்தின் தொழில் யாது?
1. அரைநிறவுருக்களை இணைத்தல்
2. புரதத்தைத் தொகுத்தல்
3. DNA யை அதிக அளவில் கொண்டிருத்தல்
4. உடுருவுக் கதிர்களுடன் நிறமூர்த்தத்தை இணைத்தல்
5. கருமென்சவ்வைக் கருப்பிரிவில் கரைத்தல்

196. 9 + 0 அமைப்பை மாத்திரம் கொண்ட கட்டமைப்பு
1. புன்மையத்தி 2. விந்தின் வால் 3. சவுக்குமுளை
4 பிசிர் 5. மேற்கூறிய யாவும்

197. இலைசோசோம்கள்
1. அமிபாவின் உணவூட்டலில் பங்கெடுக்கும்
2. ஒற்றைக் குழியத்தின் இன்குழியச் செயலில் பங்கெடுக்கும்
3) நீர்ப்பகுப்பு நொதியங்களைக் கொண்டிருக்கும்
4) சூலகத்தின் மஞ்சட்சடலம் சிதைவடைவதில் பங்கேற்கும்
5) மேற்கூறிய அனைத்தையும் கொண்டிருக்கும்.

198. கொல்சிசன் (Colchicine) என்னும் மருந்து பின்வரும் கலப்பிரிவு நிகழ்ச்சிகளில் எதைத் **தடுக்கும்?**
1) புன்கருமறைவதை 2) கதிருருநார்கள் உருவாவதை
3) இழைமணிகள் இரட்டிப்பதை 4) குழியவுருப்பிரிவை
5) DNA இரட்டிப்பதை.

199. ஒடுக்கற் பிரிவின்போது
1) DNA இன் அளவு அதிகரிக்கிறது
2) முதலாவது அனு அவத்தையில் மையப்பாத்து பிரிகிறது
3) நிறமூர்த்தங்கள் மணிக்கோவையுருவாக தென்படும்
4) புன்கரு இரட்டிக்கப்படுகிறது
5) இரு பிரிவுகளும் அடுத்தடுத்து நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200. பின்வரும் சோதனைப்பொருட்களுள் ஒன்று மனிதனின் சிறுநீருக்கு வெல்ல சோதனையில் பயன்படுகிறது. அச்சோதனைப்பொருள் யாது

1) அயடீன் 2) மில்லனின் சோதனைப் பொருள்

3) ஒஸ்மிக் அமிலம் 3) நைத்திரிக்கமிலம்

5) பெனடிக்ரின் கரைசல்

201. கலத்தில் புரதத்தை கிளைக்கோ புரதமாக மாற்றும் கலப்புன்னங்கம்

1) இரைபோசோம் 2) புன்மையத்தி 3) புன்கரு

4) நிறப்பாத்து 5) கொல்கியுடல்

202. மேற்குறிப்பிட்ட புன்னங்கங்களுள் எது / எவை நியூக்கிளிக்கமிலத்தை கொண்டுள்ளன?

1. 1 2. 3 3. 1, 2, 4 4. 2, 3, 4 5. 1, 3, 4

203. ஒரு புரத மூலக்கூற்றின் வகை தங்கி இருப்பது அதனை ஆக்கும் DNA இல் உள்ள

1. மூலங்களின் எண்ணிக்கையில் 2. மூலங்களின் வகையில்

3. மூலகங்களின் ஒழுங்கில் 4. ஒன்றிலும் இரண்டிலும்

5. ஒன்றிலும், இரண்டிலும் மூன்றிலும்

204. இலைசோசோம் மிகக்கூடுதலாகக் காணப்படும் கலங்கள்

1. வரித்தசை 2. தின்குழியக்கலங்கள் 3. நரம்புக்கலங்கள்

4. செங்குருதிக் கலங்கள் 5. மேலணிக் கலங்கள்

205 கலப்பிரிவில் இரட்டிக்கப்படாத புன்னங்கங்கள்

1. புன்மையத்தி 2. இழைமணி 2. கரு 4. E. R

5. இரண்டாவதும், நான்காவதும்

206. பின்வரும் கூற்றுக்களில் எது தவறானது

1. பிசிர்களின் உட்புறக் கட்டமைப்பு சவுக்கு முளைகளினது கட்டமைப்பிலிருந்து வேறுபடுகிறது

2. றைபோ சோம்களும், புன்மையத்திகளும் மென்சவவற்ற புன்னங்களாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குரோமற்றின் பொருள் எனப்படுவது DNA யும் புரதத்தையும் கொண்ட பரம்பரைக்குரிய பொருளாகும்

4. சில குறிப்பிட்ட தாக்கங்களுக்குரிய நொதியங்களை இழைமணிகளும் இலைசோசோம்களும் பச்சையவுருமணிகளும் கொண்டுள்ளன

5. நியூக்கிளிக்கமிலங்கள் கருவின் குரோமற்றின் 1 றைபோசோம்கள் புன்கரு ஆகியவற்றில் உண்டு,

207. DNA மூலக்கூற்றுக்கும் ஒரு நிறமூர்த்தத்திற்கும் இடையேயுள்ள தொடர்பைப் பின்வருவனவற்றில் எது நன்கு விளக்குகின்றது?

1) நிறமூர்த்தப் பதார்த்தத்தினுள்ளே DNA காணப்படுகிறது
2) DNA தனது அடக்கத்தில் பெரும்பாலும் நிறமூர்த்தத்தை சேர்த்திருக்கும்
3) மிக இறுக்கமாக சுருளப்பட்ட இரட்டைப் பட்டிகையிலான DNAயே நிறமூர்த்தங்களாகும்
4) நிறமூர்த்தங்களில் நியூக்கிளியோரைட்டுக்களை காணமுடியாது ஆனல் DNAயில் நியூக்கிளியோரைட்டுக்கள் உண்டு
5) DNA மூலக்கூற்றின் ஓர் அலகு நிறமூர்த்தமாகும்.

208. கலப்பிரிவில் பங்கெடுக்கும் நொதியம் அல்லாதது

1) RNA பொலிமரேசு  2) DNA பொலிமரேசு
3) ATP சிந்தடேசு  4) ஓட்சியேற்றல் நொதியங்கள்
5) கற்றலேசு.

209. பின்வருவனவற்றுள் சரியானது

1) ஒரு அமினே அமிலம் ஒன்றுக்குமேற்பட்ட கோடோன்களால் குறிக்கப்படும்
2) புரதத்தொகுப்பில் DNA பொலிமரேசு பங்கெடுக்கும்
3) புரதத் தொகுப்பின் மொழிபெயர்த்தலில் rRNA மாத்திரம் பங்கெடுக்கும்
4) t - RNA உடனுக்குடன் அழிக்கப்படும்
5) m - RNA ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை.

210. மாறல்கள் தோன்றுவதற்கு காரணமாக அமையக்கூடிய ஒடுக்கற்பிரிவு நிலைகள்

A - முன்னவத்தை  B - மேன்முக அவத்தை  C - அனு அவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

D – இருமடிய இழைநிலை  E – நுகவிழைநிலை
1) A மாத்திரம்  2) A, B  3) C, D  4) D, E  5) B, C

211 புன்மையத்தி பற்றிய கூற்றுக்களுள் **பிழையானது**
1) 9 + 0 நுண்ணமைப்பு கொண்டது
2) கலப்பிரிவில் பங்கெடுக்கும்
3) அக்டின் புரதம் கொண்டது
4) தாவரக்கலங்களில் காணப்படுவதில்லை
5) ஒற்றை மென்சவ்வால் சூழப்பட்டிருக்கும்

212. அமைப்பொத்த நிறமூர்த்தங்கள்
1) பருமனில் ஒத்தவை  2) நீளத்தில் ஒத்தவை
3) வடிவத்தில் ஒத்தவை 4) நுகவிழைநிலையில் சோடியாக சேரும்
5) பரம்பரையலகுகளின் ஒழுங்கில் வேறுபடும்

213. பின்வரும் கூற்றுக்களில் சரியானது
1) இலைசோசோம்கள் கலப்புற சமிபாட்டில் பங்கெடுக்கும்
2) இழைமணிகள் கிளைக்கோபகுப்பு நொதியங்கள் கொண்டிருக்கும்
3) புன்குழாய்கள் கலத்தின் வன்கூடாகத் தொழிற்படும்
4) இரைபோசோம்கள் உண்டாவதற்கு $Ca^{++}$ அவசியம்
5) கலமென்சவ்வு $K^{+}$ஐ உட்புகவிடாது.

214. இழையுருப்பிரிவின் பின்வரும் எந்த அவத்தையில் DNAயின் அளவு **மிகக்குறைவாக** இருக்கும்.
1) முன் அவத்தை  2) இடையவத்தை
3) அனு அவத்தை  4) மேன்முக அவத்தையில்  5) ஈற்றவத்தை

215. பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது**
1) m RNA கருவியிலிருந்து செய்தியைக் குழியவுருவுக்குக்காவும்
2) மூலப் பிறழ்வு என்பது DNAயில் ஏற்படும் ஒரு விகாரமாகும்
3) இரைபோசோம்கள் புன்கருவில உண்டாக்கப்படுவதில்லை
4) இறைபோசோம்களில் உள்ள இரண்டு அலகுகளும் $Mg^{++}$ அயன்களாக இணைக்கப்படுகின்றன
5) அழுத்தமான அகக்கலவுருச் சிறுவலை புரதத் தொகுப்பில் பங்கெடுப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

216. பின்வருவனவற்றில் அக்டின் புரதத்தால் ஆனது
1) கலமென்சவ்வு 2) புன்மையத்தி 3) நிறமூர்த்தம்
4) புன்கரு 5) இழைமணி

217. மேற்கூறிய வினாவிலுள்ள புன்னங்கங்களில் நுண்சடைமூளைகளை உண்டாக்குவது
1) புன்மையத்தி 2) கலமென்சவ்வு 3) இழைமணி
4) புன்கரு 5) நிறமூர்த்தம்

218 நிறமூர்த்தங்களை நுணுக்குக்காட்டியில் அவதானிக்கப் பின்வரும் எதனை உபயோகிக்க வேண்டும்?
1) அமிபா 2) பரமேசியம் 3) கைரஜோமிட்குடப்பி
4) தேரையின் தசைநார் 5) மனிதனின் உமிழ்நீர்ச்சுரப்பி

219. புன்மையத்தியை எவ்வாறு வர்ணிக்கலாம்?
1) நீண்ட உருளைவடிவான உடலாகும்
2) மூன்று நுண்குழாய்களையுடைய 9 கட்டுக்களை சுற்றயலில் உடையது
3) 3 நுண்குழாய்களையுடைய 9 கட்டுக்களை சுற்றயலில் உடையதும் 2 மத்திய குழாய்களையுடைய உடலாகும்
4) முதலாவதும், இரண்டாவதும்
5) முதலாவதும், மூன்றாவதும்

220. கதிருரு நார்கள் ஆக்கப்பட்டிருப்பது
1) புன்குழாய்களால் 2) புன் இழைகளால்
3) இலிப்பிட்டுக்களால் 4) அகக்கலவுருச் சிறுவலையினால்
5) கிளைக்கோபுரதத்தால்

221. மயிரிலும் மேற்றோலிலும் காணப்படும் கொரற்றின்
1) கலப்புறப்புரதமாகும் 2) பொசுபோ இலிப்பிட்டு
3) திரவ மூலக்கூறு 4) நிறமுள்ள புரதமாகும்
5) கலத்தக நாருரு புரதமாகும்

222. புன்கருவின் தொழில்
1) புரதத்தொகுப்பு 2) சக்தியை சேமித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) DNA தொகுத்தல் 4) இரைபோசோமைத் தொகுத்தல்
5) கருமென்சவ்வை உருவாக்குதல்

223. ஒரு பலபெத்தைட்டுச் சங்கிலியைத் தொகுப்பதற்கு பொறுப்பா உள்ள DNA மூலக்கூறின் பகுதி
1) ஒரு கோடோன் 2) ஒரு பரம்பரையலகு
3) நிறப்பாத்து 4) ஒரு அரைநிறவுரு 5) ஒரு நிறமூர்த்தம்

224. கலத்தினுள் ஓமோன்கள் தொகுக்கப்படும் தானங்களாவன
1) கொல்கியுடல் 2) இரைபோசோம் 3) அழுத்தமான E.R
4) 1ம், 2ம் 5) 2ம், 3ம்

225. இரைபோசோம் பற்றிய **தவறான** கூற்று எது?
1) நிரந்தரமாக இணைக்கப்பட்ட இரு உப அலகுகளையுடையது
2) இழைமணியில் காணப்படும்
3) இதனை ஆக்கும் கூறுகள் புன்கருவில் தொகுக்கப்படுகின்றன
4) m-RNA இலுள்ள தகவலை மொழிபெயர்க்கும்
5) மென்சவ்வற்ற புன்னங்கம்

226. ஒரு கலவட்டத்திலுள்ள பருவங்கள் பற்றிய **தவறான** கூற்று
1] G1 பருவத்தின்போது கலப்புன்னங்கங்கள் ஆக்கப்படும்
2] G2 பருவத்தில் கலப்பிரிவிற்குரிய சக்தி ஆக்கப்படும்
3] S பருவத்தில் DNA பகர்ப்பு நிகழும்
4] கலப்பிரிவு எடுப்பது குறைந்த காலமாகும்
5] G1 பருவத்தில் DNA அளவு உயர்வாக இருக்கும்.

227. பின்வரும் கலப்புன்னங்கங்களுள் எது கலப்பிரிவின்போது மகட் கலங்களினுள்ளே **செல்வதில்லை**
1] புன்கருக்கள் 2] புன்மையத்திகள் 3] நிறமூர்த்தங்கள்
4] இறைபோசோம்கள் 5] இழைமணிகள்

228. நிறமூர்த்தங்களுடன் தொடர்புடைய புரதம்
1] அல்புமின் 2] குளோபிலின் 3] கிஸ்ரோன்
4] பைபிரினோஜன் 5] கேசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229. நடுநிலை நாடிகளின் தொழிற்பாட்டில் முக்கிய பங்கெடுப்பது
   1] கொல்கியுடல்   2] புன்கரு   3] இழைமணி
   4] கரு   5] இலேசோசோம்

230. இறக்கும் இழையங்களில் தொழிற்படுகின்ற அமைப்பு
   1] அகமுதலுருச்சிறுவலை   2] இழைமணி   3] இலேசோசோம்
   4] புன்கரு   5] கொல்கி உபகரணம்

231 ஒடுக்கற் பிரிவின்போது ஒன்றிய ஒடுக்கம் நிகழ்வது
   1] இடை அவத்தை   2] மெல்லிழை நிலை
   3] தடிப்பிழைநிலை   4] நுகவிழைநிலை   4] அனு அவத்தை

232. ஒரு கலத்தில் காணப்படும் நொதியம் 100 அமினோ அமிலங்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்புரதத்தில் உள்ள அமினோஅமில வகைகளின் எண்ணிக்கை
   1] 22க்கு குறைவாக இருக்கும்
   2] 22க்கும் 30க்கும் இடைப்பட்டதாகும்
   3] 150க்கும் 75க்கும் இடைப்பட்டதாகும்
   4] 50க்கும் 100க்கும் இடைப்பட்டதாகும்
   5] 100 ஆக இருக்கும்

233. ஒடுக்கற்பிரிவின் முன்னவத்தையின் நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறையில் காட்டுவது பின்வருவனவற்றில் எதுவாகும்
   1] மெல்லிழைநிலை, தடிப்பிழைநிலை, நுகவிழைநிலை. ஊடியக்கநிலை, இருமடியவிழைநிலை
   2] மெல்லிழைநிலை, நுகவிழைநிலை, தடிப்பிழைநிலை, இருமடியவிழை நிலை, ஊடியக்கநிலை
   3] நுகவிழைநிலை, மெல்லிழைநிலை, தடிப்பிழைநிலை, இருமடியவிழை நிலை, ஊடியக்கநிலை
   4] நுகவிழைநிலை, மெல்லிழைநிலை, தடிப்பிழைநிலை, இருமடியவிழை நிலை, ஊடியக்கநிலை
   5] மெல்லிழைநிலை, தடிப்பிழைநிலை, ஊடியக்கநிலை, இருமடியவிழை நிலை' நுகவிழைநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

234 இழையுருப் பிரிவின் மேன்முக அவத்தை சிறப்பிக்கும் அம்சம்
[1] நிறமூர்த்தம் கதிர் நார்களுடன் இணைக்கப்படல்
2] அரைநிறவுடல்கள் எதிர் முனைகளை நோக்கி இடம்பெயர்தல்
3] கருமென்சவ்வு மறைதல்
4] நிறமூர்த்தம் நீரையிழந்து குறுகித் தடித்தல்
5] புன்மையத்திகள் இரட்டித்தல்

235. பின்வரும் எக்கலத்தில் இழைமணிகளை **எதிர்பார்க்கமுடியாது?**
1) விழிவெண்படலம் 2) முலையூட்டிகளின் செங்குழியம்
3) முலையூட்டிகளின் வெண்குழியம் 4) 1இலும் 2இலும்
5) 1இலும் 3இலும்

236. இடையவத்தையை ஓய்வு நிலையெனக் கருதுவதற்குரிய பொருத்தமான சான்று
1) DNA இரட்டிப்பு அடைதல்
2) புரதமாக்கல் நடைபெறுதல்
3) அதிகளவு புன்னங்கம் உருவாக்கப்படல்
4) புன்மையத்தியின் இரட்டிப்பு பூர்த்தியாதல்
5) நிறமூர்த்தம் தெளிவான மாற்றம் நடைபெறுமை

237. கொல்கியுடல் பற்றிய கீழ்க்காணும் கூற்றுக்களில் **பிழையானது** எது?
1) தட்டுருவான உள்ளீடற்ற புடகங்களைக் கொண்டது
2. தட்டுருவான புடகங்களின் நடுப்பகுதி அகன்றதாகவும், சுற்றயல் பகுதி ஒடுங்கியதாகவும் உள்ளன
3) சுரக்கும் கலங்களில் அதிகளவு விருத்தி அடைந்திருக்கும்
4) புரதத்தை இலிப்போ புரதங்களாக மாற்றும்
5) அழுத்தமான மென்சவ்வை உடையவை

238. நுண்சிறுகுழாய்கள்
1) புரதங்களாலானவை
2) புன்மையத்திகள், பிசிர்கள், சவுக்குமுளைகள், ஆகியவற்றில் உண்டு
3) அசைவுடன் தொடர்புடையன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) குழியவுருவில் காணப்படும்

5) மேற்கூறிய யாவும்

239 இழையுருப்பிரிவின்போது பின்வரும் எந்த அவத்தையில் DNA இன் அளவு மிகக் **குறைவாக** இருக்கும்

1) முன் அவத்தை 2) இடை அவத்தை 3) அனு அவத்தை
4) மேன்முக அவத்தை 5) ஈற்றவத்தை

240 Ribosomes

1) புரோகரியோட்டிக் கலங்களில் மட்டும் காணப்படுகின்றது
2) தனிமென்சவ்வானது
3. எப்பொழுதும் RER இல் மட்டும் காணப்படும்
4 இரு துணை அலகுகளும் $Mg^{2+}$ ஆல் இணைக்கப்பட்டிருக்கும்
5. 80S வகை Ribosome களில் 2 : 1 விகிதத்தில் புரதமும் RNA உம் காணப்படும்.

241. DNA பற்றிய **தவறான** கூற்று

1) Feulgen நிறச்சோதனைக்கு விடையளிக்கக்கூடியது
2) சில வைரசு தவிர்ந்த ஏனைய உயிரிகள் அனைத்திலும் காணப்படும்
3) Methyl Green Pyronine சாயத்துடன் நீலப்பச்சை நிறத்தை தரும்
4) இதன் ஒரு நிரப்புசங்கிலி m R N A ஐ ஒன்றின்மேல் ஒன்று படிந்த நிலையிலும் மற்றையது mRNA ஐ ஒன்றின்மேல் ஒன்று படியாத நிலையிலும் உருவாக்கும்
5) பற்றீரிய RNA கோள வடிவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW
# MASTER
# INSTITUTE

241, Navalar Road,
Jaffna.

B. M. C. Lane,
Jaffna.

நயா அச்சகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org